**மேட்டுப்பாளையம் நகராட்சி**

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 27.09.2024 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் சேகரம் ஆகின்ற மக்கும் குப்பைகளை இரண்டு MCC (சிராஜ் நகர் மற்றும் நந்தவனம்) மூலமாக அரைத்து உரமாக்கப்படுகிறது . இவ்விரு MCC யில் உள்ள அரவை இயந்திரம் அவ்வப்போது பழுதுபணிகள் ஏற்படுகிறது . இதனால் பழுது பணிகள் சரிசெய்யும் வரை அரவை இயந்திரத்தில் அரைக்கும் பணி நடைபெறுவதில்லை . இதனால் உரம் தயாரிக்கும் பணியில் தொய்வு ஏற்படுகிறது . இரண்டு நுண்ணுயிர் உரக்கூடத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்கள் மற்றும் இதர பழுது பணிகளை உடனுக்குடன் சரிசெய்து தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகள் தடையின்றி நடக்க ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 500000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 129<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN 40 F 2273 , கழிவுநீர் டேங்கர் லாரிக்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு Road Tax , Green Tax செலுத்த ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 9100/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 2804/2024/ H1<br>தீர்மானம் எண் : 130<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சி 33 வார்டுகளில் சேகரம் ஆகின்ற மக்கும் குப்பைகளான காய்கறிக் கழிவுகள் , பழக்கழிவுகள் Bio- Methanisation அலகில் அறைக்கப்பட்டு . மின்சாரம் தயாரிக்கப்படுகிறது . மேற்கண்ட Bio- Methanisation அலகில் தினசரி மற்றும் அவ்வப்போது பழுது பணிகள் ஏற்படுகின்றது. இதனால் பழுது பணிகள் சரிசெய்யும் வரை அரவை இயந்திரத்தில் அறைக்கும்பணி நடைபெறுவதில்லை . இதனால் உயர் அதிகாரிகள் ஆய்வின் போது பணிகள் நடைபெறுவதில்லை என கூறுகின்றனர்கள் . மேற்கண்ட Bio- Methanisation அலகில் பழுது ஏற்பட்டால் உடனடியாக சரி செய்யும் வருடாந்திர பராமரிப்பு பணி ( AMC ) மேற்கொள்ளவும் அதற்கு ஒரு ஆண்டிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 500000 /- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 131<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

4 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேகரமாகின்ற குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பையை MCC ல் உரமாக்கும் பணிக்கும் , மக்காத குப்பைகளை ( பிளாஸ்டிக் கழிவுகளை ) எதற்கும் உபயோகிக்க முடியாதவற்றை சிமெண்ட் பேக்டரிக்கு அனுப்பப்பட வேண்டி உள்ளது. எனவே , இந்நகராட்சியிலிருந்து பெரிய லாரி மூலமாக வாடகை அடிப்படையில் அரியலூர் ( டால்மியா சிமெண்ட் பேக்டரி ) , மற்றும் அல்ட்ரா டெக் சிமெண்ட் பேக்டரி அனுப்ப ஒரு டிரிப்க்கு ரூ. 20000/- செலவினம் ஏற்படும் என தெரிய வருகின்றது. எனவே சேகரமாகின்ற பிளாஸ்டிக் கழிவுகளை அவ்வப்பொழுது அனுப்ப ஆகும் தோராய செலவினம் ரூ. 5,00,000 /- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .

தீர்மானம் எண் : 132

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

5 மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2023 – 2024 குடிநீர் நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 19 . 07. 2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது .

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 24 பங்களாமேடு பேருந்து நிலையத்தில் உள்ள மோட்டார் பம்புகள் சர்வீஸ் பணிகள் செய்தல் | ரூ. 7.65 இலட்சம் | 1) திருவாளர் அல்கம் இண்டஸ்ட்ரீஸ்<br>2) திருவாளர் ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 0.17% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் மின்மோட்டார்கள் பம்பு சர்வீஸ் பணிகள் செய்தல் . | ரூ. 15.80 இலட்சம் | 1) ) திருவாளர் அல்கம் இண்டஸ்ட்ரீஸ்<br>2) திருவாளர் ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 0.16 % மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.99 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் அல்கம் இண்டஸ்ட்ரீஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண் : 582/2023/ இ1

தீர்மானம் எண் : 133

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

6 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்களை எஸ்.ஆர். இன்ஜினியர்ஸ் மூலம் பெற்று கொசுப்புழு ஒழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானத்தின்படி 08.09.2024 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2024-2025 தினக்கூலி விகிதப்பட்டியலின் படியும், ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு 1 x 655, ESI-13%, EPF - 3.25, Adminicharge - 5%, சேர்த்து தோராய செலவினம் ரூ. 68 x 794x 89 = 4805288 /- க்கு மன்றத்தின் அனுமதியும், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரை அதே விலைவிகிதப்புள்ளியில் பணியினை தொடரவும், அதற்கான தோராய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அத்தியாவசியப்பணி என்பாதல் மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் : 134

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 7 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண் TN 40F 2273 க்கு ( Septic Tanker ) தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது பார்க்கும் பணிக்கு 13 . 08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது . இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது .<br><table><tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தத் தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் ஈரோடு</td><td>ரூ. 248500</td></tr><tr><td>2</td><td>திருவாளர் முருகன் ஆட்டோஸ் , மேட்டுப்பாளையம்</td><td>ரூ. 249950</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் பாக்கியலட்சுமி மோட்டர் மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண் : 1268/2024/ எச் 1<br>தீர்மானம் எண் : 135<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023 – 2024 – ன் கீழ் சிறுமுகை சாலை வார்டு எண் 3 – ல் வாரச்சந்தை கட்டிடம் ரூ. 129.00 இலட்சத்தில் பணிகள் துவக்கப்பட்டு தற்போது பணி முடிக்கும் தறுவாயில் உள்ளது . மேற்படி வளாகத்தின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு மூன்று புறமும் சுற்றுச்சுவர் அமைக்க உத்தேச செலவினம் தொகை ரூ. 12.00 இலட்சம் ஆகும் . எனவே , இப்பணியினை மேற்கொள்ளவும் . இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 136<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2023 – 2024 – ன் கீழ் ரூ. 8.63 கோடியில் புதியதாகபேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது . இப்பணி முடிவுற்று பேருந்துகள் இயக்கும் போது தற்போது அமைக்கப்பட்டுள்ள நகராட்சி அம்மா உணவகம் இடையூறாக இருக்கும் . ஆதலால் தற்போது ஊட்டி பேருந்துகள் நிறுத்தும் இடத்தின் அருகில் உள்ள உணவக கட்டிடத்தை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு அம்மா உணவு வளாகத்தை மாற்றம் செய்திடலாம் . மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் பொது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் . இப்பணிக்கு மதிப்பீடு ரூ. 8.00 இலட்சம் ஆகும் . எனவே, இப்பணியினை மேற்கொள்ளவும் , இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 137<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 S.M நகர் துவக்கப்பள்ளி கட்டிடம் சுவர் பழுதடைந்து உள்ள காரணத்தால் மழைக்காலங்களில் உடைந்து விழும் நிலையில் உள்ளது . மேற்கண்ட பணியினை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ. 4.00 இலட்சம் ஆகும் . எனவே , இப்பணியினை மேற்கொள்ளவும் , அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 138<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை அமைக்கும் பணி KFW மற்றும் IUDM திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு பணி தொடங்கப்பட்டு , பணிகள் முடிக்கப்பட்டு சோதனை ஒட்டம் நடைபெற்று வருகிறது . இந்நிலையில் இத்திட்டத்திற்கு பிறகு தற்போது நகராட்சியில் பல பகுதிகள் வளர்ச்சியடைந்துள்ளது . மேலும் பாதாள சாக்கடை பணிகள் சில பகுதிகளில் விடுபட்டுள்ளது. எனவே புதிதாக வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளும் , பாதாள சாக்கடை பணிகள் விடுபட்ட பகுதிகளும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் TWAD மூலம் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண் ; 1819/2024 / இ1<br>தீர்மானம் எண் : 139<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 12 | திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் கணினி தொடர்பான சாதனங்கள் பழுது ஏற்பட்டால் அதனை சரிசெய்திடவும் , கணினி சாதனங்கள் பராமரிப்புக்காகவும் ஒரு ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள இந்நகராட்சிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது . எனவே , மேற்காண் கணினிக்கான ஆண்டு பராமரிப்பு பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 0.80 இலட்சம் ஆகும் . எனவே இதற்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண் ; 3181/2024/இ1<br>தீர்மானம் எண் : 140<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு அரசாணை எண் 39 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023 கீழ் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023 – 2024 ன் கீழ் வார்டு எண் 16 அண்ணாஜிராவ் சாலையில் தினசரி மார்க்கெட் கட்டுதல் பணிக்கு ரூ.440.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பெற்று 29.09.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு , வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள<br>திரு. N. மாரியப்பன் – திருநெல்வேலி அவர்களுக்கு 02.01.2024 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது . மேற்கண்ட பணியை துவங்க ஒப்பந்ததாரருக்கு முதல் அறிவிப்பு 09.07.2024 யில் , இரண்டாவது அறிவிப்பு 23.07.2024 யில் மூன்றாவது மற்றும் இறுதி அறிவிப்பு 05.08.2024 யில் வழங்கப்பட்டும் ஒப்பந்ததாரர் இது நாள் வரை பணி துவக்கவில்லை . மேலும் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை எனவே , திட்டப்பணியை உடன் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பெற வேண்டியும் , மேலும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படியும் , மேற்படி ஒப்பந்ததாரர் திரு.N.மாரியப்பன் திருநெல்வேலி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>ந.க.எண் ; 3852/2023 / இ1<br>தீர்மானம் எண் : 141<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 2023 – 2024 – ம் ஆண்டு நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் , வைக்கப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண் ; 2003/2023/சி 2<br>தீர்மானம் எண் : 142<br>தீர்மானம் : : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |

| | |
|---|---|
| 15 | இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள்,தூய்மைபணியாளர்கள், தூய்மை பணிமேற்பார்வையாளர்கள் அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு 2024 ம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்க வேண்டி இருப்பதால் அரசு நிறுவனங்களான தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியம் , ஈரோட்டில் காலணிகளையும் , கோவையில் உள்ள கோ ஆப் டெக்ஸில், பணியாளர்களுக்கு சீருடைகளை, கொள்முதல் செய்யவும் , பணி உத்திரவு வழங்கவும் , மற்றும் பணியாளர்களுக்கு சீருடை தைக்க தையல் கூலி வழங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு ;** மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண் ; 3181/2022/H1<br>**தீர்மானம் எண்** : 143<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனங்களை தனியார் ஒப்பந்ததாரர் நிறுவனமான TECTUS Infra Pvt Ltd ., நிறுவனத்திற்கு 01.01.2024 அன்று கீழ்க்காணும் வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் பழுதுபணிகள் தகுதிச்சான்று பெறுதல் மற்றும் இதர பணிகள் ஏற்பட்டால் மேற்கண்ட நிறுவனமே அவரது பராமரித்து கொள்ளவும் மேலும் வாகனத்தை திரும்ப நகராட்சி வசம் ஒப்படைக்கும் பொழுது நல்லநிலையில் தான் ஒப்படைக்க வேண்டும் என இதன் மூலம் உத்திரவிடப்பட்டது . ஆனால் இதுநாள் வரை கீழ்க்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்தவில்லை . எனவே வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய ஆய்வு காப்பீட்டுத்தொகை மற்றும் வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய இதர கட்டணங்களை நகராட்சி மூலம் செலுத்தவும் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையினை Tectus Infra Pvt Ltd ., நிறுவனத்திற்கு மாதந்தோறும் வழங்கப்படும் பட்டியலில் பிடித்தம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது . |

| | | |
|---|---|---|
| 1 | TN40P1320 SML | ரூ. 8694 |
| 2 | TN 40C 0551 HCV | ரூ. 8694 |
| 3 | TN40 AC 8861 Tata Ace | ரூ. 20377 |
| 4 | TN40 AC 8840 Tata Ace | ரூ. 20377 |
| 5 | TN40 AC 8804 Tata Ace | ரூ. 20377 |
| 6 | TN40 AC 8897 Tata Ace | ரூ. 20377 |
| 7 | TN40 AC 8830 Tata Ace | ரூ. 20377 |
| 8 | TN40 AC 8820 Tata Ace | ரூ. 20377 |
| 9 | TN40 AC 8870 Tata Ace | ரூ. 20377 |
| 10 | TN40 AC 8895 Tata Ace | ரூ. 20377 |
| 11 | TN40 AC 9703 Tata Ace | ரூ. 19294 |
| 12 | TN40 AC 9694 Tata Ace | ரூ. 19294 |
| 13 | TN40 AC 9846 Tata Ace | ரூ. 20014 |

**அலுவலகக் குறிப்பு ;** மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண் ; 400/2017/H1

**தீர்மானம் எண்** : 144

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 17 | 2024 - 2025 ம் ஆண்டிற்கான சொத்துவரி , காலியிட வரி , தொழில் வரி , குடிநீர் கட்டணம் , கடைவாடகை மற்றும் இதர இனங்களை நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை 100 % வசூல் செய்யும் பொருட்டும் , இதர அறிவிப்புகள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் இந்நிதியாண்டில் ஆட்டோவில் மற்றும் SMS மூலமும் விளம்பரம் செய்யவும் , மேலும் இதர செலவினங்களுக்காகவும் உத்தேச செலவினமாக ரூ. 2,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு ;** வரி வசூல் பணியின் அவசர அவசியம் கருதி , நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மன்றம் ஏற்கலாம் .<br>ந.க.எண் ; 1347/2023/அ2<br>தீர்மானம் எண் : 145<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

18 மேட்டுப்பாளையம் நகராட்சியில் 23.08.2024 அன்று கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது .

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 9.90 இலட்சம் | திரு.V.செல்வராஜ்<br><br>திருவாளர் . திலீப் இண்ப்ரா | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.V.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு** ; மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்த்தை மன்றம் ஏற்கலாம் .

ந.க.எண் : 580/2023/இ1

தீர்மானம் எண் : 146

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

19 மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து Old Scheme , Combined Scheme , மற்றும் New Scheme என மூன்று திட்டங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது . மேலும் நகராட்சி பகுதிகளுக்கு கே கே நகர் , மணி நகர் , பழைய நகராட்சி அலுவலகம் , சங்கர் நகர் , SM நகர் , LIC நகர் மற்றும் பூஸ்டர் மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது .

தற்பொழுது நகராட்சி குடிநீர் பிரிவில் உள்ள குழாய் பணியாளர் , மின் பணியாளர்கள் மற்றும் FountainCleaner ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது . நகராட்சியில் மூன்று திட்டங்கள் மூலம் 6 மேல்நிலை தொட்டிகள் மூலம் விநியோகம் செய்ய நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ள கூடுதலாக 21 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் , இவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி ந.க.எண் . 7457 /2020/E2 நாள் 25.09.2020 ல் நிர்ணயம் செய்யப்பட்ட கூலியுடன் ESI , EPF மற்றும் Insurance உடன் வழங்க உத்தேசமாக ஒரு ஆண்டிற்கு ரூ. 60.00இலட்சம் ஆகும் . இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் : 147

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

20 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2024 - 2025 கல்விநிதி மற்றும் குடிநீர் நிதி 2024 - 2025 ன் கீழ்க்கண்ட பணிகளுக்கு 30.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது .

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 16 அண்ணாஜிராவ் சாலையில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் ( கோப்பு எண் 3271/2024/இ1) | 3.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br><br>2.திரு.V.செல்வராஜ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்புப் பணிக்காக இரண்டு Desilting Machine களை இயக்க வெளிக்கொணர்வு முறையில் ஓட்டுநர் மற்றும் உதவியாளர்களை நியமித்தல் (கோப்பு எண் 3321/2024/இ1) | 19.47 | திருவாளர் M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>திரு. G.K.S சேதுபதி | 0.03% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>4.99 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் சாலைகள், மழைநீர்வடிகால் ,சிறுபாலங்கள், ஆழ்துளை கிணறுகள், தெருவிளக்கு, குடிநீர்பகிர்மானக் குழாய்கள், குடிநீர்ப்பிரதானக் குழாய்கள் மற்றும் குடிநீர் பொதுக்குழாய்கள் ஆகியவற்றை நவீன GPS கருவி மூலம் அளவீடு செய்து சாலைப் பதிவேடு தயாரித்தல் (கோப்பு எண் 3318/2024/இ1) | 9.80 | திருவாளர் DB இன்பொசொலுசன்ஸ்<br><br>திருவாளர் AMS சாப்ட் சொலுசன்ஸ் | 5.12% மதிப்பீட்டிற்கு அதிகம்<br><br>0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 4 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான குளோரின்வாயு கொள்முதல் செய்தல் (கோப்பு எண் 3278/2024/இ1) | 7.00 | 1. திருவாளர் VR வாட்டர் இண்ப்ரா கம்பெனி<br><br>2. திருவாளர் அல்கம் இண்டஸ்ட்ரீஸ் | 5.02% மதிப்பீட்டிற்கு அதிகம்<br><br>0.05% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 5 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான படிகாரம் கொள்முதல் செய்தல் (கோப்பு எண் 3279/2024/இ1) | 4.00 | 1. திருவாளர் அல்கம் இண்டஸ்ட்ரீஸ்<br><br>2. திருவாளர் ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 0.12% மதிப்பீட்டிற்கு குறைவு<br>6.08% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 6 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்திற்கு 60 HP மோட்டார் கொள்முதல் செய்தல் (கோப்பு எண் 3282/2024/இ1) | 8.30 | 1. திருவாளர் அல்கம் இண்டஸ்ட்ரீஸ்<br><br>2. திருவாளர் ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு<br>5.05% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 7 | வார்டு எண் 20 மற்றும் 22 ல் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து பகிர்மானக் குழாய் விஸ்தரிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் (கோப்பு எண் 3283/2024/இ1) | 3.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br><br>2. திருவாளர் ப்ளம் பாம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 8 | பிரஸ்காலனி செல்லும் DI குழாயில் வார்டு எண் 31 அருண்நகர் முதல் கே.கே. நகர் மேல்நிலைத் தொட்டி வரை சென்று கே.கே. நகர் மேல்நிலைத் தொட்டியில் குழாய் அமைத்தல் (கோப்பு எண் 3001/2024/இ1) | 3.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 9 | வார்டு எண் 29 மணிநகர் உயர்நிலைப் பள்ளியில் மிதிவண்டி நிறுத்துமிடம் அமைத்தல் (கோப்பு எண் 3295/2024/இ1) | 6.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 4.91% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 10 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள மேல்நிலைத் தொட்டி மற்றும் தரைமட்டத்தொட்டியில் பொருத்தப்பட்டுள்ள அளவு மானிகளை ஒரு வருடத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் (கோப்பு எண் 3285/2024/இ1) | 1.10 | 1. திருவாளர் ரியல் டெக்சிஸ்டம்ஸ்<br>2. திருவாளர் அக்வாஸ்ட்ரீம் சிஸ்டம்ஸ் | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு<br>5.08% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 11 | வார்டு எண் 31 அருண் நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல் (கோப்பு எண் 3286/2024/இ1) | 13.50 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 12 | வார்டு எண் 19 காட்டூர் சாலையில் உள்ள Line Booster நிலையத்தில் புதியதாக Galvanished Sheet அமைத்தல் (கோப்பு எண் 3274/2024/இ1) | 4.50 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 13 | தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் (கோப்பு எண் 3276/2024/இ1) | 12.50 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 14 | வார்டு எண் 30 நியூ அம்மன் நகர் பகுதியில் புதிய பகிர்மானக் குழாய் அமைத்தல் (கோப்பு எண் 3275/2024/இ1) | 1.60 | 1.திரு. M. வேலுசாமி<br>2. திரு. C. நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 15 | வார்டு எண் 29 மணிநகர் நகரவை உயர்நிலைப் பள்ளியில் குழந்தைகள் மையத்தில் புதிய சமையல் அறை கட்டுதல் (கோப்பு எண் 3287/2024/இ1) | 5.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br><br>2.திரு.செல்வராஜ் | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 16 | வார்டு எண் 29 மணிநகர் நகரவை உயர்நிலைப் பள்ளியில் முதல் தளத்தில் இரண்டு வகுப்பறைகள் கட்டுதல் (கோப்பு எண் 3292/2024/இ1) | 18.00 | 1.திருவாளர் VRK கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>2. திரு. சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | 17 | வார்டு எண் 13 சங்கர் நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் (கோப்பு எண் 3281/2024/இ1) | 6.60 | 1.திருவாளர் M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>2.திரு. G.K.S சேதுபதி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 18 | வார்டு எண் 29 ராமதாஸ் லே அவுட் பகுதியில் உள்ள பூங்கா மராமத்து பணிகள் செய்தல் (கோப்பு எண் 3288/2024/இ1) | 7.00 | 1. திரு.செல்வராஜ்<br>2.திருவாளர் திலீப் இண்ப்ரா | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 19 | வார்டு எண் 29 மணி நகர் உயர்நிலைப் பள்ளி கட்டிடங்கள் முன்பு பேவர் பிளாக் தளம் அமைத்தல் (கோப்பு எண் 3289/2024/இ1) | 16.00 | 1. திரு.செல்வராஜ்<br>2.திருவாளர் திலீப் இண்ப்ரா | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 20 | வார்டு எண் 3 வள்ளுவர் நகரவை துவக்கப்பள்ளியில் புதிய தரைமட்ட குடிநீர் தொட்டி கட்டுதல் (கோப்பு எண் 3290/2024/இ1) | 2.50 | 1. திருவாளர் ஸ்ரீசக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>2.திருவாளர் திலீப் இண்ப்ரா | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>4.93% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | 21 | வார்டு எண் 18 காட்டூர் அங்கன்வாடி கட்டிடத்தில் பராமரிப்பு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் (கோப்பு எண் 3291/2024/இ1) | 1.20 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br><br>2.திரு.செல்வராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | வார்டு எண் 4 நேருஜி நகரவை துவக்கப்பள்ளியில் சுற்றுச்சுவர் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்தல் (கோப்பு எண் 3292/2024/இ1) | 15.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட ராஜபுரம் மற்றும் ஊமப்பாளையம் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் செய்தல் (கோப்பு எண் 3293/2024/இ1) | 8.50 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம்<br>0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட எஸ்.எம்.நகர், எல்.எஸ்.புரம் மற்றும் சாமப்பா லே அவுட் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் செய்தல் (கோப்பு எண் 3293/2024/இ1) | 13.50 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.செல்வராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 25 | வார்டு எண் 18 காட்டூர் நகராட்சிப் பள்ளியில் சமையலறை கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் (கோப்பு எண் 3271/2024/இ1) | 5.00 | 1. திருவாளர் திலீப் இண்ப்ரா<br>2.திரு.ப.செல்வராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.97% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்த்தாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** ; மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம் .

ந.க.எண் : 3000/2024/இ1

தீர்மானம் எண் : 148

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

21 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான அலுவலகங்கள் , நகராட்சி பள்ளிகள் ,உரக்கிடங்குகள் மற்றும் அனைத்து நகராட்சி கட்டிடங்களில் உள்ள விளக்குகளுக்கான வயரிங் மற்றும் விளக்குகள் பழுதடைந்து உள்ளதால் அவற்றினை சரிசெய்திட வேண்டியதாக உள்ளது . மேற்காண் பணிக்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சம் ஆகும் . எனவே இச்செலவினத்தினை மேற்கொள்ளவும் . இதற்கான நிதியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 592/2023/ இ1

தீர்மானம் எண் : 149

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான லாரி ஸ்டேண்ட் கட்டணம் வசூல் செய்தல் உரிமம் குத்தகை இனத்திற்கு மூன்று ஆண்டு தொகுப்பு காலத்திற்கு மாத வாடகை அடிப்படையில் நகராட்சி அலுவலகத்தில் 24.07.2024 அன்று நடைபெற்ற ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை ரூ.3,77,000/- கோரியுள்ள திரு. சபரிநாதன் காளிதாஸ் விழுப்புரம் , அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 4618/2020/ அ1<br>தீர்மானம் எண் : 150<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சி நகரமைப்பு பிரிவில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருப்பூர் மற்றும் இந்நகராட்சிக்கு எதிராக ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் , நில ஆக்கிரமிப்பு போன்ற வழக்குகள் , மேல்முறையீடு மற்றும் இதர வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற வழக்குகளில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கான வழக்குக் கட்டணம் வழங்க அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 1891/2023/ எப் 1<br>தீர்மானம் எண் : 151<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 24 | இந்நகராட்சிக்கு வரப்பெற்ற வட்டாட்சியர் ,மேட்டுப்பாளையம் அவர்களின் கடிதம் ந.க.எண். 1960/2023/அ4 , நாள் . 16.08.2024 – ன் படி 19 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கிட உள்ளாட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றி தரும்படி கோரப்பட்டுள்ளது . மேற்படி , கடிதம் தொடர்பாக நகரசார் ஆய்வாளர் அவர்களது குறிப்பில் மேட்டுப்பாளையம் நகராட்சி , சாந்தி நகர் வார்டு B பிளாக் எண். 55 T.S.No. 7 எனவும் , இதன் மொத்த பரப்பளவு 0.0842.50 சது ர மீட்டர் என உள்ளது. இதன் வகைப்பாடு என்பது இட்டேரி வண்டிப்பாதை என நகரளவை ஆவணங்களில் பதிவாகி உள்ளது என தெரிவித்துள்ளார் . மேலும் , தற்போது இப்புலத்தில் 19 நபர்கள் வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள் . எனவே, மேற்படி பகுதியில் குடியிருந்து வருபவர்களுக்கு வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலம் இலவச வீட்டு மனைப்பட்டாவை வழங்குவதற்கு இந்நகராட்சியில் ஆட்சேபனை ஏதும் இல்லை என தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது . மேற்படி பொருள்குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 152<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 25 | இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களுக்கு வசூல் செய்யப்பட்டு வரும் சரக்கு மற்றும் சேவை வரி தாக்கல் செய்ய திரு. ஆதிஸ்வரன் வரி ஆலோசகர் அவர்களுக்கு கட்டணத்தொகை வழங்க June 2024 முதல் March 2025 வரை காலத்திற்கு தோராயமாக ரூ. 30,000/- செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 153<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 26 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொது சுகாதாரப்பணிகள் செய்யவும், கிருமி நாசினிகள் கொண்டு சுத்தம் செய்ய தேவைப்படும் சுண்ணாம்புத்தூள் 15டன், பிளீச்சிங்பவுடர் 5டன், வாங்குவதற்கு 28.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன . |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ |
|---|---|---|
| 1 | திருவாளர்.Dlip, Infra, சிறுமுகை ரோடு, மேட்டுப்பாளையம் | ரூ.335000/- |
| 2 | திருவாளர் வி. செல்வராஜ், சிறுமுகை ரோடு, மேட்டுப்பாளையம். | ரூ. 390000/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.Dlip, Infra, சிறுமுகை ரோடு, மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 2466/2024/H1

**தீர்மானம் எண்** : 154

**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

27 மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 12 நகராட்சிப்பள்ளிகளுக்கு தூய்மை பணியாளர்கள் ஒப்பந்தமுறையில் அமர்த்தவேண்டியுள்ளது. இந்நகராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் 67 நபர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார்கள். இப்பணியாளர்கள் முக்கியசாலைகள் பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்யும் பணிபுரிந்து வருகின்றார்கள். மேட்டுப்பாளையம் நகராட்சியில் பள்ளிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேற்கொள்ள 36 தூய்மைப்பணியாளர்கள் தேவைப்படுவதால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலைப்புள்ளி விகிதத்தில் 1 நாளைக்கு ESI மற்றும் EPF யுடன் சேர்ந்து ரூ. 630 ஊதியமும் 36 நபர்களுக்கு 1x630x36x89 நாட்களுக்கு ESI& EPF சேர்ந்து தோராய செலவினம் ரூ- 25.00/- இலட்சத்திற்கு இம்மன்றத்தில் தீர்மான எண். 92 நாள். 24.07.2024 அன்று அனுமதி பெறப்பெற்றது.

மேற்காணும் பணிக்கு 28.08.2024 அன்று ஆன்லைன் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் - 89 நாட்களுக்கு 36 தூய்மை பணியாளர்களை ஈடுபடுத்தி பள்ளி வளாகத்தை தூய்மையாக பாரமரித்து , பள்ளிக்கழிப்பறைகள் சுத்தம் செய்யும் பணி . | 24.00 இலட்சம் | 1. திருவாளர்.எஸ்.எஸ். இன்ஜினியங் கோவை.<br>2. A1, Security Serviced and all facility Service.<br>3.Tectus Infra Pvt Ltd, Ramanathapuram, comibatore.<br>4.Chendur enter private ltd, Tirupur. |

மேற்காணும் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்று அவ்விரு இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 04.09.2024 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| | <table><tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr><tr><td>1</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளுக்கு 89 நாட்களுக்கு 36 தூய்மை பணியாளர்களை ஈடுப்படுத்தி பள்ளி வளாகத்தை தூய்மையாக பாரமரித்து, பள்ளிக்கழிப்பறைகள் சுத்தம் செய்யும் பணி.</td><td>24.00 இலட்சம்</td><td>1. M/s. Tectus Infra pvt ltd. Ramanathapuram, Coimbatore.<br>2. Chendur Enter pvt ltd, Tirupur.</td><td>மதிப்பீட்டிற்கு சமமாக உள்ளது.<br>மதிப்பீட்டிற்கு அதிகமாக உள்ளது. – 1.56%</td></tr></table><br>எனவே குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் Tectus Intra Pvt Ltd, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு.** மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் ஏற்கலாம்<br>**தீர்மானம் எண்** : 155<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 28 | இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதிக்கான வட்டித்தொகை 2020- 2021ம் ஆண்டு முதல் 2023 – 2024ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டி உள்ளது. மேற்படி பணியினை தனியாரிடம் ஒப்படைக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,60,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 4513/2024/பி2<br>**தீர்மானம் எண்** : 156<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 29 | கோயம்புத்தூர் மாவட்ட உள்ளாட்சி தேர்தல் பிரிவில் 15 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட ஆயுட்காலம் முடிவுற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வருவாய் துறை வசம் ஒப்படைக்க ஏதுவாக கைப்பேசி செயலி (Mobile App) EMS மூலம் இருப்பு விவரத்தினை ஆய்வு செய்து பணி முடிக்கப்பட்டது.<br>மேற்கண்ட பணிக்கு Anga Info Tech நிறுவனத்திலிருந்து ( Labour For Scanning and Loadman) ஸ்கேனிங் மற்றும் இதர பணிகளுக்கு பணியாளர்கள் வழங்கப்பட்டதற்கான தொகை ரூ. 9350/- (ரூபாய் ஒன்பதாயிரத்து முந்நூற்றி ஐம்பது மட்டும்) மேற்கண்ட நிறுவனத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட கோவை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளில் உத்திரவிடப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட தொகை ரூ. 9350/ (ரூபாய் ஒன்பதாயிரத்து முந்நூற்றி ஐம்பது மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** ; அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 1441/2021/சி3<br>**தீர்மானம் எண்** : 157<br>**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 30 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் - 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்பு கட்டணங்கள் சுயசான்றின் அடிப்படையில் இணைய வழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, அரசாணை (நிலை) எண்.94, நாள்:18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>தீர்மானம் எண் : 158<br>தீர்மானம் : : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 31 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழைய மோட்டார் வாகனங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படும் உதிரிபாகங்கள் மற்றும் அபாயகரமான கழிவுகளை போட்டு வைத்து பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் தீங்கு விளைவிப்பதுடன் , மழைநீர் தேங்கி அதனால் கொசு உற்பத்திக்கு காரணமாக இருந்து தொற்று நோய் பரவ காரணமாக இருந்து வருகிறது. இதனால் பொதுசுகாதார சட்ட பிரிவுகளின்படி மேற்கண்ட வியாபாரிகள் சட்டபூர்வ அறிவிப்பை பெற்றுக் கொண்டும் தற்போது வரை பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் அச்சுருத்தலாக உள்ள வாகனங்களின் உதிரி பாகங்கள் மற்றும் கழிவுகளை அகற்றாமல் அவை தெருக்களில் கிடந்து வருவதால் தொடர்ந்து கொசு உற்பத்திக்கு காரணமாக இருந்து வருவது தெரியவருகிறது. இச்செயல் தமிழ்நாடு பொதுசுகாதாரச்சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணான செயலாகும்.<br>தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தின்படி பொதுசுகாதாரத்திற்கு அச்சுருத்தலாக அபாயகரமானதாகள்ள உள்ளதாக அறிவிக்கை செய்யப்பட்டு கழிவுகள் பறிமுதல் செய்தும் மேலும் அவ்விடத்திலேயே (On the Spot) பகிரங்கிர பொது ஏலம் மூலம் அனைத்து மோட்டார் வாகன உதிரிபாகங்கள் மற்றும் இதர கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 3236/2024/ H1<br>தீர்மானம் எண் : 159<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 32 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023 – 2024 ன் கீழ் வார்டு எண் 16, அண்ணாஜிராவ் சாலையின் தினசரி மார்கெட் கட்டுதல் பணிக்கு ரூ.440.00 இலட்சத்திற்கு மறு ஒப்பந்தப்புள்ளி 20.09.2024 அன்று கோரப்பட்டதில் இணையதளம் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பெற்றது மற்றும் Offline மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படவில்லை, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தாரர்களின் தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது, எனவே ஒப்பந்ததாரகளின் விலைப்புள்ளி உறையினை 24.09.2024 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ. இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr><tr><td>1</td><td>வார்டு எண் 16, அண்ணாஜிராவ் சாலையில் தினசரி மார்கெட் கட்டுதல் பணி</td><td>ரூ.440.00இலட்சம்</td><td>1. திருவாளர் . R.S. கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>2. திருவாளர் . சரவணா இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்சன்ஸ்</td><td>0.03% மதிப்பீட்டிற்கு குறைவு<br>3.29 % மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr></table><br>மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் R.S. கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேல்நடவடிக்கை தொடர அனுமதி வேண்டப்படுகிறது .<br>**அலுவலகக் குறிப்பு** ; மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 3852/2023/ இ1<br>தீர்மானம் எண் : 160<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 33 | மேட்டுப்பாளையம் நகராட்சி 33 வார்டு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகளுக்கான பணிகள் மாநில நகர்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (SUIDF) மூலம் சிப்பம் 1-ல் பாதாள சாக்கடை திட்ட மண்டலம் 1,2,3 மற்றும் 6க்குட்பட்ட பகுதிகளில் 8305 வீட்டு இணைப்புகள் வழங்க தொகை ரூ 634.00 இலட்சமும், மற்றும் சிப்பம் 2-ல் மண்டலம் 4 மற்றும் 5 உட்பட்ட பகுதிகளில் 7945 வீட்டு இணைப்புகளும் வழங்க ரூ 606.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கப்பட்டு 23.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர் அர்பன் கன்ஸ்ட்ரக்சன் திருப்பூர் (URBAN CONSTRUCTION TIRUPPUR)என்ற நிறுவனத்திற்கு 13-04-2023 அன்று சிப்பம் 1 மற்றும் சிப்பம் 2 பணி உத்திரவு வழங்கப்பட்டது,<br>இதுநாள்வரை ஒப்பந்ததாரரால் சிப்பம்1-ல் 14% பணிகள், சிப்பம் 2 -ல் 9% பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட திட்டப்பணி முன்னேற்றம் இல்லாத காரணத்தால் பணியினை விரைந்து முடிக்க வேண்டி ஒப்பந்ததாரருக்கு பல அறிவிப்பு கடிதங்கள் (02.06.2023, 08.08.2023, 11.06.2024, 20.06.2024, 16.07.2024 மற்றும் 09.08.2024)மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் மற்றும் அலுவலக ஆய்வுகூட்டங்களிலும் அறிவுறுத்தப்பட்டும் இதுநாள்வரை பணிகள் விரைந்து முடிக்க ஒப்பந்ததாரரால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேலும் பணி மேற்கொள்ள தேவையான தொழில்நுட்ப பணியாளர்கள் பணி அமர்த்தப்படவில்லை, இதனால் பணியினை முடிக்க திட்டமிடல் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.<br>மேலும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் பணிகள் விரைந்து முடிக்க தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் 18.09.2024 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நேரடி ஆய்வில் இப்பணியை உரிய திட்டமிடலுடன் விரைந்து முடிக்க ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்க அறிவுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் 19.09.2024 அன்று நகராட்சி அலுவலக ஆய்வு கூட்டத்தில் ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள உரிய திட்டமிடலுடன் விரைந்து பணியினை முடிக்க ஆய்வுகூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.<br>மேலும் பணி 23.09.2024 அன்று இறுதி அறிவிப்பு கடிதம் மூலமும் பணிகளை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்ட பின்பும், கள ஆய்வில் எவ்வித முன்னேற்றமும் இல்லை.<br>எனவே இத்திட்டப்பணி உடன் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு பயன்பட வேண்டியுள்ளதால் மேற்படி ஒப்பந்ததாரர் திருவாளர் அர்பன் கன்ஸ்ட்ரக்சன் திருப்பூர் (URBAN CONSTRUCTION TIRUPPUR) நிறுவனத்தினை பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு திட்டப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 161<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 34 | மேட்டுப்பாளையம் நகராட்சிகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் எனர்சி எபிசியன்ட் ( Energy Efficient ) விளக்குகளாக மாற்றி மின் கட்டணத்தை குறைத்து நகராட்சியின் நிதி நிலைமை சீர் செய்ய வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழே கண்ட விபரப்படி உள்ள மொத்தம் 2684 தெருவிளக்குகளில் ஏற்கனவே 2243 தெருவிளக்குகள் எனர்சி எபிசியன்ட் ( Energy Efficient ) விளக்குகளாக மாற்றப்பட்டுவிட்டது. மீதமுள்ள 441 தெருவிளக்குகளையும் எனர்சி எபிசியன்ட் ( Energy Efficient ) விளக்குகளாக (எல்இடி) மாற்றினால் மின் கட்டணம் குறையும்.<br>தெருவிளக்குகள் விபரம் கீழ்கண்டவாறு<br>1. 15 வாட்ஸ் எல்இடி விளக்குகள் - 2067<br>2. 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் - 382<br>3. குழல்விளக்குள் - - 76<br>4. 60 வாட்ஸ் எல்இடி விளக்குகள் - 119<br>5. 150 வாட்ஸ் (எம்விஎல்,எஸவிஎல்) - 37<br>6. உயர் கோபுர விளக்குகள் - 3<br>மொத்த விளக்குகள் - 2684 |

| | |
|---|---|
| | இதில் 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் 55 எண்ணிக்கை 120 வாட்ஸ் எல்இடி விளக்குகளக ஏற்கனவே மாற்றப்பட்டு விட்டது. தற்போது கீழே கண்ட விபரப்படி எல்இடி விளக்குகளாக மாற்றப்பட வேண்டும்.<br>மாற்றப்பட வேண்டிய விளக்குகள் விபரம்<br>1. 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 76 எண்ணிக்கை -20 வாட்ஸ் எல்இடி விளக்காக மாற்ற வேண்டும்<br>2. 150 வாட்ஸ் எம்விஎல் ,எஸ்விஎல் விளக்குகள் 37 எண்ணிக்கை 60 வாட்ஸ் எல்இடி விளக்குகளாக மாற்ற வேண்டும்.<br>3. 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் - 327 எண்ணிக்கை 120 வாட்ஸ் எல்இடி விளக்குகளாக மாற்றப்பட வேண்டும்.<br>4. உயர் கோபுர விளக்கு - 1 எண்ணம் (12x 200 வாட்ஸ்) எல்இடி விளக்குகளாக மாற்றப்பட வேண்டும்.<br>(மொத்தம் 441 விளக்குகள் எல்இடி விளக்குகளாக மாற்றப்பட வேண்டும்)<br><br>மேற்கண்ட விளக்குகள் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் ந.க.எண் ஆர்ஓசி எண் 45490 /2012/DO1 dt;11.05.2022 யின் படி நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் வாங்கிக் கொள்ளலாம். இதற்கான உத்தேச செலவினம் ரூ. 70 லட்சம் ஆகும். இச்செலவினத்தை வருவாய்நிதியில் இருந்து செலவினம் செய்யப்படுவதால் நகராட்சி நிதி நிலைமைக்குட்பட்டு படிப்படியாக தெருவிளக்குகளை எல்இடி விளக்குகளாக மாற்றம் செய்யலாம்.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 162<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 35 | 27.09.2024 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நகராட்சி அலுவலக நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்வுகள்<br>தீர்மானம் எண் : 163<br>தீர்மானம் : 27.09.2024 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நகராட்சி அலுவலக நகர்மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டத்தில் மன்றபொருள்கள் மீது விவாதம் நடைபெற்று வந்த போது, காலை சுமார் 11.30 மணி அளவில் 7 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.மு.முகமது இப்ராகிம் , நகர்மன்ற உறுப்பினர்கள் குடிநீர் அருந்த வைத்திருந்த எவர் சில்வர் டம்ளரை நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையாளர் ஆகியோர் மீது பட்டு காயம் ஏற்படும் வகையில் மேசையில் கோபத்துடன் ஓங்கி அடித்தார். 18 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. பா. சுனில்குமார் அஜெண்டா நகல்களை கிழிந்து எறிந்தார் . பின்னர் 7 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.மு.முகமது இப்ராகிம் , 10 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரா.தனசேகரன், 18 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. பா. சுனில்குமார், 19 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. க. மீராமைதீன் , 22 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.பெ.முத்துசாமி, 24 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரா. மருதாச்சலம், 29 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி .எஸ். கலைச்செல்வி, 30வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. சு.குருபிரசாத், 31வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. விஜயலட்சுமி ஆகியோர்கள் கூச்சல் குழப்பமிட்டு நகர்மன்ற கூட்ட அரங்கில் அமர்ந்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் . மேற்கண்ட நகர்மன்ற உறுப்பினர்கள் இது போன்ற ஏற்கனவே 30.01.2024 , 28.02.2024, 24.07.2024 ஆகிய நகர்மன்றக் கூட்டங்களில் கூட்ட நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டனர். இருப்பினும் , அவர்கள் எச்சரித்து விடப்பட்டனர் . தற்போதும் தொடர்ந்து நகர்மன்றக் கூட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டு வருகின்றனர். எனவே, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் IV , பகுதி I பிரிவு 160 (8)(i) ,(iii), ன்படி சபையின் நடவடிக்கைகளை நிர்வகிக்கும் விதிகளை மீறிய குற்றத்திற்காக மேற்கண்ட ஒன்பது நகர்மன்ற உறுப்பினர்களை இரண்டு நகர்மன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளத் தடைவிதித்து இடைநீக்கம் செய்து நகர்மன்றத் தலைவர்/ மன்றத்தால் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது .<br>மேற்கண்ட தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட நகர்மன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். (32 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்) நகர்மன்ற துணைத் தலைவர் திருமதி. ச. அருள்வடிவு, 5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. சீ. விஜயகாண்டீபன், 6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஸமினா பேகம், 8 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. கி. புவனேஸ்வரி, |

| | |
|---|---|
| | 9 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. மு. முகமது யாசின் , 11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. மு. ஜம்ருத் பேகம் முகமது யூனூஸ், 12 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சு. கிருஷ்ணமூர்த்தி, 13 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. அ. சங்கீதா , 16 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஷா. அனிஷா, 17 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. க. ரவிக்குமார், 20 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. சு. காளியம்மாள், 21 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.எஸ். நவீன், 25 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. க. உமாராணி , 26 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. க. சிவமலர், 27 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஓ.ரா.நடராஜன், 28 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி .எஸ்.அனிதா, 33 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி .ஆ.சுமதி . |